

தமிழ்நாடு அரசு

இரண்டாம் வகுப்பு

பருவம் - I

தமிழ்

ENGLISH

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2026

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?

CHILD LINE 1098 NIGHT & DAY

அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?

14417 கல்வித் தகவல் மையம்

அழையுங்கள் 14417

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2026

அச்சிட்டு வெளியிடுவோர்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

அணிந்துரை

குழந்தைப்பருவம் இயல்பாகவே வியப்புக்குரியதாகவும், எல்லையற்ற ஆர்வத்துடனும், கற்பனை ஆற்றல் உடையதாகவும், எதையும் கண்டறியும் ஆற்றலுடனும் நிரம்பி இருக்கும். இந்த இயல்பே கற்றல் அனுபவத்திற்கான முதல்படி. இதன் அடிப்படையில் மகிழ்ச்சியாகவும் பொருளுணர்ந்தும் ஈடுபாட்டுடனும் கற்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் 1முதல் 3ஆம் வகுப்புவரையிலான பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025-இன் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாடநூல்கள், மாநிலத்தின் அடிப்படைக் கல்வியை வலுப்படுத்துவதில் முக்கியப்படியாக விளங்குகின்றன. **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின்** தொலைநோக்குப் பார்வையும் வழிகாட்டுதலும், இக்கல்விக் கொள்கையின் முக்கியச் சிறப்புகளான குழந்தைமையக் கற்றல், திறன் அடிப்படையிலான கற்றல் மற்றும் உள்ளடங்கிய கற்றல் போன்றவை இப்பாடநூல்களில் வெளிப்படுவதை உறுதி செய்துள்ளன.

பள்ளிக் கல்வித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், பாடப்பொருள் அறிவுடன் 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை ஒருங்கிணைத்து இப்பாடநூல்களைக் கதைவழிக் கற்றல் அனுபவங்களாக உருவாக்குவதில் அளப்பரிய பங்காற்றியுள்ளார்.

மேலும், திறன் அடிப்படையிலான கற்றல் அணுகுமுறையானது கலைத்திட்டம் மற்றும் மதிப்பீட்டை, மனப்பாடம் செய்து கற்றல் என்ற நிலையிலிருந்து மாற்றி, ஆழமான கருத்தியல் புரிதல் மற்றும் பொருளுணர்ந்து பயன்படுத்துதல் என்ற நிலைக்கு மேம்படுத்தியுள்ளது. பண்புநலன்களை வளர்த்தெடுக்கும் விழுமியக் கல்வி, வாழ்வியல் திறன்கள், கலை மற்றும் உடல் இயக்கத் திறன்களோடு ஒருங்கிணைந்து குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

கலைத்திட்ட உயர்மட்ட வல்லுநர் குழுவின் உறுப்பினர்கள், கலைத்திட்ட வடிவமைப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்களின் நுட்பமான அறிவு மற்றும் கல்வி அனுபவத்தின் மூலம் இப்பாடநூல்களை வடிவமைத்துச் செம்மைப்படுத்துவதில் தொடர்ச்சியான வழிகாட்டுதலை வழங்கியுள்ளனர். இப்பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும்.

இத்தொடக்கநிலையில், கல்வியானது குழந்தைகளுக்கு வலுவான கற்றல் அடித்தளத்தை அமைப்பதோடு அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் துணையாக நிற்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு இப்பாடநூல்கள், குழந்தைகள் பங்கேற்று, பொருளுணர்ந்து ஆழமாகக் கற்கும்வகையில் கீழ்க்காண் கூறுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- தன்னம்பிக்கையுடன் தம் கருத்தை வெளிப்படுத்த உதவும் பேசுதல் மற்றும் கேட்டலுக்கான வாய்ப்புகள்.
- தருக்கரீதியான சிந்தனை மற்றும் கருத்தியல் புரிதலை வலுப்படுத்தும் கற்றல் செயல்பாடுகள்.
- படித்தல் மற்றும் எழுதுதல் திறன் பெறுவதற்காகப் பாடத்துடன் ஒருங்கிணைத்து அளிக்கப்பட்டுள்ள பயிற்சிகள்.
- நுண்தசை மற்றும் உடலியக்கத் திறன்களை வளர்ப்பதற்கான வரைதல், வண்ணம் தீட்டுதல், வரியொற்றி எழுதுதல் மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகள்.
- தாமாகக் கற்பதற்கும் சுயமாகச் சிந்திப்பதற்குமான எளிய வாய்ப்புகள்.

விழுமியங்களையும் வாழ்வியல் திறன்களையும் பாடநூல்களில் ஒருங்கிணைத்து வழங்குவதன் மூலம் பரிவு, ஒத்துழைப்பு, பொறுப்புணர்வு மற்றும் தன்னம்பிக்கை போன்ற பண்புகளைக் குழந்தைகள் வளர்த்துக்கொள்ள உதவுகின்றன.

கற்றலானது மனப்பாடம் செய்வதைத் தாண்டி, புரிதல் மற்றும் பயன்பாட்டை நோக்கிய ஒரு திறன் அடிப்படையிலான அணுகுமுறையால் வழிநடத்தப்படுகிறது. மதிப்பீடானது கற்றல் செயல்முறையிலேயே ஒன்றிணைக்கப்பட்டு, தொடர்ச்சியானதாக, பொருளுள்ளதாக, கற்றலுக்குத் துணைபுரிவதாக அமைந்துள்ளது.

இப்பாடநூல்கள், கற்றல் பயணத்தின் வழித்துணை. ஆராயவும், சிந்திக்கவும், தன்னை வெளிப்படுத்தவும் குழந்தைகளுக்கு இவை தளம் அமைத்துக் கொடுக்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சியுடன் கற்பதையும், தன்னம்பிக்கையுடன் வளர்வதையும் வலுவான எதிர்காலத்திற்கு அடித்தளமிடுவதையும் உறுதிசெய்யும் ஒட்டுமொத்தப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாக இப்பாடநூல்கள் விளங்குகின்றன. **"உள்ளடங்கிய, சமவாய்ப்பு மற்றும் எதிர்கால ஆயத்தத்தை உறுதிசெய்யும் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட கல்வி"** என்ற தொலைநோக்குப் பார்வையை இப்பாடநூல்கள் முன்னெடுத்துச் செல்கின்றன.

இயக்குநர்
மாநிலக் கல்வியியல்
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
தமிழ்நாடு

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,
நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய். நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

முகவுரை

பாடநூலினுள். . .

> *தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்*
>
> *தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!* – பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ்நாட்டின் தனித்துவப் பண்பாடு, மொழி மற்றும் சமூக மரபை முன்னிறுத்தி தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025 உருவாக்கப்பட்டுள்ளது. இது குழந்தைகளுக்கான கட்டாயத் தேவையாக, முக்கியமான ஒற்றைக்கூறாக அடிப்படை எழுத்தறிவைக் குறிப்பிடுகிறது; தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் வயதுக்கு ஏற்ற கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் உள்ளிட்ட வாழ்நாள் முழுமைக்குமான அடிப்படை மொழித்திறன்கள் பெறுவதை வலியுறுத்துகிறது. அனைத்துப் பாடங்களையும் கற்பதற்கான அடித்தளமாக மொழிப்பாடம் அமைவதால் குழந்தைகளின் உள்ளார்ந்த திறன்களைக் கண்டறியவும், மேம்படுத்தவும், சமூகத்தோடு இயைந்து வாழவும் வழிகாட்டும் வகையில் இப்பாடநூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

துறுதுறுப்பும் எதையும் தேடித் துருவி அறிந்துகொள்ளும் குழந்தைகளின் இயல்புணர்ந்து அவர்களுக்குப் பிடித்தமான/நெருக்கமான மற்றும் அறிமுகமானவற்றைக் கொண்டே இந்நூலில் பாடங்கள், பயிற்சிகள், மொழி விளையாட்டுகள் போன்றவை பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளன.





பாடக்கட்டமைப்பு

ஒவ்வொரு பாடமும் சிந்தனையைத் தூண்டும் வினாவுடன் தொடங்குகிறது. அந்த வினாவிற்கான விடைகளைக் குழந்தைகள் தாமாகவே தேடி அறியும் அணுகுமுறையில் பாடம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால், மீளப்படித்தலும் பொருளுணர் திறனும் வலுப்பெறுகின்றன. குழந்தைகள் பெற வேண்டிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களுக்கான பாடங்கள் பின்வருமாறு பாடநூலுள் அளிக்கப்பட்டுள்ளன.

அலகு 1

1. **நம் நினைவில்** (முதல் 15 நாள்களுக்கான செயல்பாடுகள்)
   - அடிப்படை ஆயத்தச் செயல்பாடுகள்.
2. **மழையே வா!** (பாடல்)
   - ஒத்த ஓசை உடைய எளிய பாடல்.
3. **பொம்மை** (படக்கதை)
   - பெறுவது மட்டுமல்ல கொடுப்பதும் மகிழ்ச்சிதான் என்பதை வெளிப்படுத்தும் பாடம்.

அலகு 2

4. **சுள்ளெறும்பின் ஒரு நாள்...** (கதை)
   - சிக்கல் தீர்க்கும் திறன்.
   - ஒரு நாளில் வழக்கமாகச் செய்யும் செயல்கள் சார்ந்த பாடம்.
5. **நானும் உதவுவேன்** (படக்கதை)
   - உதவி செய்தலை ஊக்குவிக்கும் பாடம்.

அடிப்படைத் திறன்களை வளர்க்கும் பயிற்சிச் செயல்பாடுகள்

கேட்டல், பேசுதல்
கேட்டலைப் புரிந்துகொண்டு தம் மொழிநடையில் பேசுதல்

படித்தல்
பொருள்புரிந்து ஆர்வத்துடன் தேடிப் படித்தல்

எழுதுதல்
எழுத்துவழிப் படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்

பாடநூலில் கற்றவற்றை உறுதிப்படுத்தும் மதிப்பீடு

- கற்றவற்றை மீண்டும் நினைவுகூரும் பகுதி – **திரும்பிப் பார்க்கலாம்**
- கற்றல் விளைவுகளை மதிப்பிடும் பகுதி (சிந்தித்து விடையளித்தல், கதை கூறுதல், பாடல் பாடுதல்) – **கற்றல் பயணம்**
- குழந்தைகள் தாம் கற்றதை அறியும் பகுதி – **நான் கற்றவை**
- ஒவ்வொரு அலகிற்குமான வளரறி மதிப்பீடு – **நானே செய்வேன்**

ஆசிரியர் கையேடு



ஆசிரியர் குறிப்பு


தனி / இணை/ குழு/ ஆசிரியர் உதவியுடன் செயல்பாடுகள்

கதை, பாடல், பேசுதல், படித்தல், எழுதுதல் உத்திகள்


கற்றல் விளைவுகள்

கூடுதல் பாடப்பொருள் (பாடல், கதை, பயிற்சிகள்)


மதிப்பீட்டுக் கூறுகள் (Rubrics)

ஒலிவடிவில் பாடங்கள், காணொலி வடிவில் அசைவூட்டக் காட்சிகள், மின்னுரு பாடப்பொருள் (Digital content), மின்னூல் (e – Book), உள்ளடங்கிய மின்னூல் (i – Book) குழந்தைகளின் பாடம் சார்ந்த ஆர்வத்தைக் கூர்தீட்டும் வகையில் அளிக்கப்பட்டுள்ளன. இவை தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேச, படிக்க, எழுத, படைக்க வழிகாட்டும்.



நிறைவாக, ஒவ்வொரு குழந்தையும் வாழ்நாள் முழுமைக்குமான வலுவான, நிரந்தரமான கல்வி அடித்தளத்தைப் பெறுவதோடு, எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் சமவாய்ப்பினைப் பெற்று அடிப்படை எழுத்தறிவு என்னும் இலக்கினை அடைவதையே இப்பாடநூல் எதிர்நோக்குகிறது.

இரண்டாம் வகுப்பு

பருவம் - I

தமிழ்



பொருளடக்கம்

அலகு	தலைப்பு	பக்க எண்
1	1. நம் நினைவில்	2
	2. மழையே வா!	17
	3. பொம்மை	24
2	4. சுள்ளெறும்பின் ஒரு நாள்...	40
	5. நானும் உதவுவேன்	52

மின்னூல்

உள்ளடங்கிய மின்னூல்

ஆசிரியர் கையேடு





அலகு
1

1. நம் நினைவில்

என்னைப் பற்றி...



வணக்கம்.
என் பெயர்
_____







எனக்குப் பிடித்த வண்ணம்

பச்சை

எனக்குப் பிடித்த வண்ணம்

_____

எனக்குப் பிடித்த உணவு



பொங்கல்

எனக்குப் பிடித்த உணவு

_____



நான் வளர்க்க விரும்புவது

மீன்கள்

நான் வளர்க்க விரும்புவது

_____

விரும்பிச் செய்வது



படம் வரைவது

விரும்பிச் செய்வது

_____



கற்றுக்கொள்ள விரும்புவது

நடனம்

கற்றுக்கொள்ள விரும்புவது

_____



இன்று எனது உணர்வு



மகிழ்ச்சி ○



அழுகை ○



வருத்தம் ○



வியப்பு ☑



அச்சம் ○



என்னை எனக்குப் பிடிக்கும். ஏனெனில், நான்

- ☑ சிரிப்பேன்.
- ○ நண்பர்களுடன் விளையாடுவேன்.
- ☑ சிறுசிறு வேலைகளைச் செய்வேன்.
- ☑ உதவுவேன்.
- ☑ பள்ளிக்கு உரிய நேரத்தில் செல்வேன்.

கவிதா தன்னைப்பற்றி வெளிப்படுத்துகிறாள்.
அவரவர் தன்னைப்பற்றி வெளிப்படுத்த வேண்டும்.

- ◉ நான் தனித்துவம் உடையவர்.
- ◉ என்னைப் போல் வேறொருவர் இல்லை.

இப்படிக்கு,

கவிதா

இன்று எனது உணர்வு



மகிழ்ச்சி ○

அழுகை ○

வருத்தம் ○

வியப்பு ○

அச்சம் ○

என்னை எனக்குப் பிடிக்கும். ஏனெனில், நான்

- ○ சிரிப்பேன்.
- ○ நண்பர்களுடன் விளையாடுவேன்.
- ○ சிறுசிறு வேலைகளைச் செய்வேன்.
- ○ உதவுவேன்.
- ○ பள்ளிக்கு உரிய நேரத்தில் செல்வேன்.

- ◉ நான் தனித்துவம் உடையவர்.
- ◉ என்னைப் போல் வேறொருவர் இல்லை.

இப்படிக்கு,

_____

நன்றி!

செய்யாதே! செய்யாதே!



பூனைக்குட்டியே பூனைக்குட்டியே
பானை உருட்டாதே!
பசி தீர்க்கப் பால் தருவேன்
பானை உருட்டாதே!

ஆட்டுக்குட்டியே ஆட்டுக்குட்டியே
வேலி தாண்டாதே!
விரும்பித் தின்ன தழை தருவேன்
வேலி தாண்டாதே!

சிற்றெறும்பே சிற்றெறும்பே
கடித்து வைக்காதே!
கட்டி வெல்லம் நான் தருவேன்
கடித்து வைக்காதே!

பச்சைக்கிளியே பச்சைக்கிளியே
பறந்து போகாதே!
பழுத்த நல்ல பழம் தருவேன்
பறந்து போகாதே!

ஆசிரியர் கையேடு

ஆசிரியர் கையேட்டில் உள்ள பாடல் உத்திகளைப் பயன்படுத்திப் பாட வேண்டும். படத்தைப் பார்த்து மேலும் சில பாடல் வரிகளை உருவாக்கிப்பாட வேண்டும்.

வண்ணமிடுக.





வட்டத்தில் வைக்கலாம்.





ஆசிரியர் கையேடு

திசை, தொலைவு ஆகியவற்றை உற்றுநோக்கி விளையாட வேண்டும்.

எழுத்தை நிரப்புக: சொல்லுக்கு உரிய படம் வரைக.



ம் உ அ த் ந்

ட் ஆ ப் இ ஏ





















எது எங்குள்ளது? படம் பார்த்து எழுதுக.



மரத்தில் இருப்பவை

அணில், ..., ..., ...

தரையில் இருப்பவை

....., ..., ...

கல்லில் இருப்பவை

....., ...

நீரில் இருப்பது

.....

உரிய வண்ணமிடுக: பெயரை எழுதுக.



கி ● ஓ ● க ● நா ● மீ ●



வேறுபட்ட சொல்லை வட்டமிடுக: காரணம் கூறுக.



சிங்கம்	கரடி	மயில்	கீரி
நாற்காலி	விசிறி	கட்டில்	அப்பளம்
நிலா	தண்ணீர்	மீன்	கப்பல்

முதல் எழுத்தை மாற்றினால் கிடைக்கும் சொல்லை எடுத்து எழுதுக.



மயில்	குயில்	உதவு	
நாக்கு		கண்	
புழு		நாற்று	
கூடு		கன்று	
கூறு		பூண்டு	

நூறு	சூடு
குழு	பாக்கு
மண்	நுங்கு
கதவு	காற்று
மூக்கு	கூண்டு
குயில்	குன்று

படத்தில் வேறுபாடுகளை வட்டமிட்டுப் பெயரை ✓ செய்க.







- மீன் ☐
- ஆடு ☐
- வயல் ☐
- கரடி ☐
- குருவி ☐
- அருவி ☐
- பூக்கள் ☐
- சூரியன் ☐

உரிய சொல் எது? கண்டுபிடித்து எழுதுக.



தேநீர்	தேங்காய்	செங்கல்	வெல்லம்
செம்மண்	முள்வேலி	மேம்பாலம்	நெய்முறுக்கு
சரவெடி	தேன்சிட்டு	வேப்பமரம்	தீப்பெட்டி
பூச்செடி	வெங்காயம்	கேழ்வரகு	பெருங்காயம்

நீர் தேநீர்

கல் _____

முள் _____

காய் _____

வெடி _____

மரம் _____

பாலம் _____

பெட்டி _____

பூ _____

மண் _____

நெய் _____

தேன் _____

சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.





சொல்லுக்குள் உள்ள சொற்களை எடுத்து எழுதுக.



முருங்கைக்காய்	
முருங்கை	காய்





கொண்டைச்சேவல்	

தொடர்வண்டி	





போர்வை	

நெருப்புக்கோழி	





பச்சைமிளகாய்	

வண்ணமிடுக: பெயரை எழுதுக.













கடற்கரைக்கு வந்த யானை





ஆசிரியர் கையேடு

யானை எப்படி வந்தது என்பது குறித்துக் கலந்துரையாட வேண்டும்.

சொற்களை இணைத்து எழுதுக.



பொன்  பொன்வண்டு

 தொட்டி

மின் 

 தோகை

நீர் 

 பலா

தொடருக்கு உரிய படத்தை ✓ செய்க.



பாடல் பாடுகிறாள்.





☐ ☐

நாடகம் நடிக்கிறான்.





☐ ☐

நடனம் ஆடுகிறாள்.





☐ ☐

கதை படிக்கிறான்.





☐ ☐

எது சரி? வண்ணமிடுக. காரணம் கூறுக.







சிலரிடம் மட்டும் பழகுவேன்.



அனைவரிடமும் பழகுவேன்.



உதவி செய்வேன்.



உதவி செய்ய மாட்டேன்.

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.



நான் கற்றவை



1. சொற்களைப் படிக்க முடியும். ☐ ☆☆☆
2. மொழி விளையாட்டுகளில் ஈடுபட முடியும். ☐ ☆☆☆
3. உறவுமுறைப் பெயரை அறிந்து பயன்படுத்த முடியும். ☐ ☆☆☆

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்



நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்

ஞ் ய் ழ் ன் ம் ண்

த் வ் ங் ர் ட் ற்

க் ல் ப் ள் ச் ந்





உன்

உ

உ ன் ⟶ உன்

என்

எ

எ ன் ⟶ என்



உன் ஏன் ஊர் எள்

உண் எண் ஏர் ஆம்



ஊர்

ஓர் ஊர்

என் ஊர்

உன் ஏர்

ஓர் எண்











கண்டுபிடி! கண்டுபிடி!



அடுத்தது எது? வட்டமிடுக.










?



பொருத்தமானதை இணைக்க.













2. மழையே வா!



மழையே, மழையே வா, வா
மண்ணில் விளையாட வா
புழுதி யான தெருவிலே
புதிய மணம் கமழ வா.

தெருவில் வெள்ளம் பெருக வா
திரிந்து நாங்கள் ஆடவா
கரையில் நின்று கால்வாயில்
கப்பல் விட்டு மகிழ வா.

ஏரி குளம் பொங்க வா
எங்கள் கிணறு நிரம்ப வா
நீரைக் கையால் அள்ளியே
நின்று நாங்கள் குளிக்க வா!

– ம. இலெ. தங்கப்பா.

ஆசிரியர் கையேடு

ஆசிரியர் கையேட்டில் உள்ள பாடல் உத்திகளைப் பயன்படுத்திப் பாட வேண்டும்.

செய்து பழகலாம்



1. பாடலில் பிடித்த சொற்களை எழுதுக.

1. _____	6. _____
2. _____	7. _____
3. _____	8. _____
4. _____	9. _____
5. _____	10. _____



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவில் ஒவ்வொருவருடனும் ஒப்பிட வேண்டும்.



அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் : _____

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை : _____

2. பாடலில் அடிக்கோடிட்டு எழுதுக.



ம, க – எழுத்துகளில் தொடங்கும் சொற்கள் :

ம — மழையே _____ _____ _____

க — _____ _____ _____



படத்திற்கு ஏற்ற பாடல் வரி எது? எடுத்து எழுதுக.

_____



உரிய விடைகளைப் பாடலில் கண்டுபிடித்து அடிக்கோடிட வேண்டும்.

3. சொற்களை உருவாக்கி எழுதுக.





கழுகு



விதை

கதை



மாங்காய்



ஆடு



புல்



எலி



பூக்கள்



பானை



மாலை



தேன்



நண்டு



பொரி

4. படிக்க.

நிலா

வட்ட நிலா

அழகான வட்ட நிலா

வானில் அழகான வட்ட நிலா





5. பேசலாம்; எழுதலாம்.



பாலம்

....

....

....

....

ஆசிரியர் கையேடு

படத்தைப் பார்த்துப் பேச வேண்டும்; தெரிந்தவற்றின் பெயர்களை எழுத வேண்டும்.

6. படத்தில் உள்ளவற்றின் பெயர்களை ✓ செய்க.





கூடு ☐	காகம் ☐
ஓடம் ☐	ஆந்தை ☐
கிளி ☐	வானவில் ☐
குடை ☐	மரம் ☐
கோழி ☐	ஆடு ☐

7. ஒரு சொல்லை மாற்றி எழுதுக.



முயல் ஓடியது.
பரிசு பெற்றது.

நரி ஓடியது.
பரிசு பெற்றது.

8. மழையும் நீங்களும் – பேசுக; ✓ செய்க.



















9. சொல்லிப் பழகுக.



வளைந்து செல்லும் ஆறு
வலையில் மீன்கள் ஆறு

சேற்றில் ஓடுது நண்டு
காற்றில் பறக்குது வண்டு

ஆசிரியர் கையேடு

மீண்டும் மீண்டும் சரியாக ஒலித்துப் பழக வேண்டும்.

கற்றல் பயணம்

படைப்பு நேரம்.

✦ மழையே வா! – பாடலுக்கு ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வோர் இராகம் அமைத்துப் பாடலாம்.



நான் கற்றவை



1. பிடித்த இராகத்தில் பாடலைப் பாட முடியும். ☐ ☆☆☆
2. படம் பார்த்துப் பேச முடியும். ☐ ☆☆☆
3. பொருள்புரிந்து சொற்களைப் படிக்க முடியும். ☐ ☆☆☆

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

3. பொம்மை

மாலா, கரடி பொம்மை வாங்க ஆசைப்பட்டாள். உண்டியலில் காசு சேர்த்தாள். அம்மாவுடன் கடைக்குச் சென்றாள். கரடி பொம்மை வாங்கினாள். ஆனால், மாலாவின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. என்ன காரணமாக இருக்கும்?



ஆசிரியர் கையேடு

எல்லோரும் கூறும் விடைகள் பாடத்திற்குள் உள்ளதா? படித்துப் பார்க்கலாமா?




ஆனால், பர்வீன் புது பொம்மை வாங்கலையே!
என் புது பொம்மையைப் பார்த்தால் என்ன நினைப்பாள்?
அவள் கவலைப்படுவாளா?
மாலா...
வா... வா... பர்வீன். உள்ளே வா!
மகிழ்ச்சியாக வருகிறாயே! நீயும் புதிதாக ஏதாவது வாங்கினாயா?
இல்லை இல்லை. கொடுத்தேன்.



செய்கை விளையாட்டு



- தட்டு... தட்டு...பந்தைத் தட்டு... என்று சொல்லுவேன். குதித்துக்கொண்டே பந்தைத் தட்டுவதுபோல் செய்வேன்.
- பொம்மை... பொம்மை... ஆடும் பொம்மை... என்று சொல்லுவேன். பொம்மை போல் ஆடுவேன்.



செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டு / ஒலிப்பதிவைக் கேட்டுப் பின்தொடர்ந்து படிக்கலாம்.

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



1. _____
2. _____
3. _____
4. _____
5. _____
6. _____
7. _____
8. _____
9. _____
10. _____



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவில் ஒவ்வொருவருடனும் ஒப்பிட வேண்டும்.



அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் : _____

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை : _____

3. பேசலாம்.

பிறருக்கு நான் மகிழ்ச்சியோடு செய்தவை...





பிறருக்கு மகிழ்ச்சியோடு செய்த செயல்கள் / நிகழ்வுகள் பற்றிப் பேச வேண்டும்.

4. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

சரி	மகிழ்ச்சி	மாலா
பந்து	சிரித்தான்	பர்வீன்
பொம்மை	இல்லை	தம்பி

1. இரண்டு எழுத்துச் சொற்கள் : _____ , _____

2. ஐந்து எழுத்துச் சொற்கள் : _____ , _____

3. 'ன்' எழுத்தில் முடியும் சொற்கள் : _____ , _____

4. எனக்குப் பிடித்த சொற்கள் : _____ , _____

சொற்களை விரைந்து படிப்பேன்: வண்ணமிடுவேன்.

5. பாடச்சுருக்கம் – படிக்க; விடையளிக்க.



பொம்மை

மாலா சேமித்தாள்.

பொம்மை வாங்கினாள்.

பர்வீன் பந்து செய்தாள்.

தம்பிக்குக் கொடுத்தாள்.

இருவரும் மகிழ்ந்தனர்.

ஒன்றாக விளையாடினர்.



நிரப்புக.

1. பர்வீன் செய்தது _____ (பொம்மை / பந்து)

2. மாலா வாங்கியது _____ (பொம்மை / பந்து)

6. சொல்வதை எழுதுக.

ஆசிரியர் கையேடு

படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக் கேட்டு எழுத வேண்டும்.

7. பெயர்ப்பலகையை நிரப்புக.

பழக்கடை பொம்மைக்கடை பூக்கடை இனிப்புக்கடை

குணா பொம்மைக்கடை
ஈரோடு



மேரி _____
சென்னை



சமீர் _____
வேலூர்



நிலா _____
மதுரை



8. எழுத்துகளை இணைத்துச் சொற்கள் எழுதுக.





வீடு _____

கூடு _____



_____

_____



_____

_____



_____

_____



_____

_____



_____

_____

9. படிக்க.





10. தொடருக்கு உரிய படம் எது?

பெட்டி மேல் பொம்மை



 ☐

 ☐

 ☐

11. ஒரு சொல்லை மாற்றி எழுதுக.



பூ வரைந்தேன்.
வண்ணம் தீட்டினேன்.
பார்த்து மகிழ்ந்தேன்.

பொம்மை வரைந்தேன்.
வண்ணம் தீட்டினேன்.
பார்த்து மகிழ்ந்தேன்.



12. மகிழ்ச்சி யாருக்கு? ✓ செய்க; காரணம் கூறுக.



எனக்கு மட்டும் மகிழ்ச்சி. ☐
இருவருக்கும் மகிழ்ச்சி. ☐



எனக்கு மட்டும் மகிழ்ச்சி. ☐
இருவருக்கும் மகிழ்ச்சி. ☐



எனக்கு மட்டும் மகிழ்ச்சி. ☐
இருவருக்கும் மகிழ்ச்சி. ☐



எனக்கு மட்டும் மகிழ்ச்சி. ☐
இருவருக்கும் மகிழ்ச்சி. ☐



எனக்கு மட்டும் மகிழ்ச்சி. ☐
இருவருக்கும் மகிழ்ச்சி. ☐



13. சொல்லிப் பழகுக.





சாலையின் ஓரம் கடை
கடையில் மொறுமொறு வடை

சிறகை விரித்த குருவி
குருவி பார்த்த அருவி

ஆசிரியர் கையேடு

மீண்டும் மீண்டும் சரியாக ஒலித்துப் பழக வேண்டும்.

கற்றல் பயணம்



படைப்பு நேரம்.



✦ **பொம்மை** – பாடத்தின் கதையைச் சொந்த மொழிநடையில் சொல்லலாம்.

நான் கற்றவை





1. கேட்ட கதையைச் சொல்ல முடியும். ☐ ☆☆☆
2. பெயர்ப்பலகையைப் படிக்க முடியும். ☐ ☆☆☆
3. பொருள்புரிந்து தொடர் எழுத முடியும். ☐ ☆☆☆

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.



வரைந்து வண்ணம் தீட்டலாம்.





செய்து மகிழலாம்.







தங்களுக்குப் பிடித்த உருவம் செய்து காட்சிப்படுத்தலாம்.



திரும்பிப் பார்க்கலாம்



படங்களைப் பார்த்துப் பேசுங்கள்.







இரண்டு படங்களிலும் உள்ளவற்றை ✓ செய்யுங்கள்.





கப்பல் ☐	மீன் ☐	பந்து ☐	ஊஞ்சல் ☐
குடை ☐	படகு ☐	மேகம் ☐	காகம் ☐



உரிய பொருள்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.







சொல் உருவாக்குங்கள்.

டு கு லா றா

நிலா	பு_____	நுங்_____	தட்_____
பலா	சு_____	சங்_____	சிட்_____

நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்



ண ம ஞ ப க ந

ச ட ங ல ள ன

ழ ர ற த வ ய



க
ங
ச
ஞ
ட
ண
த
ந
ப
ம
ய
ர
ல
வ
ழ
ள
ற
ன

மணல்

ம

ம ண ⟶ மண

மண ல் ⟶ மணல்



வயல்

வ

வ ய ⟶ வய

வய ல் ⟶ வயல்



பல் அகல் கப்பல் கரகம்

கண் வயல் சட்டம் மத்தளம்

பழம் அவல் பட்டம் அப்பளம்



பட்டம்

வண்ணப் பட்டம்

என் வண்ணப் பட்டம்



நம் வயல்.

என் படம்.

உன் அப்பளம்.

என் அண்ணன்.











நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்



கா
ஙா
சா
ஞா
டா
ணா
தா
நா
பா
மா
யா
ரா
லா
வா
ழா
ளா
றா
னா

ஙா மா தா லா கா ழா
றா டா ணா பா ளா யா
ஞா ரா ணா சா வா நா





நாடகம்

நா
நா + ட → நாட
நாட + க → நாடக
நாடக + ம் → நாடகம்

மாங்காய்

மா
மா + ங் → மாங்
மாங் + கா → மாங்கா
மாங்கா + ய் → மாங்காய்



யாழ்	வால்	பாடல்	தாளம்
வாள்	பாலம்	மாதம்	காகம்
நாள்	வாரம்	மாமா	தாத்தா



பார்
யாழ் பார்
அழகான யாழ் பார்



தாள் தா!
பாப்பா வா!
மான் பார்.
காளான் தந்தார்.











நானே செய்வேன்



1. கேட்டு, விடை கூறுக.

குட்டி முயல் நடந்து சென்றது. அப்போது மழை பெய்தது. அருகே மஞ்சள் வண்ணக்குடை ஒன்று இருந்தது. அந்தக் குடை தலைகீழாக விரித்து வைக்கப்பட்டு இருந்தது. குட்டி முயல், குடையைப் பார்த்தது. ஐ, எனக்குக் குடை கிடைத்தது! என்றது; குடையை எடுத்துத் தலைக்குமேல் பிடித்தது. குடையில் இருந்த மழைநீர் முயலின்மீது கொட்டியது. அடடா... அடைமழையில் நனையாமல் இருக்க, குடை பிடித்தேன்; குடை மழையில் முழுவதுமாக நனைந்தேனே! என்று சொல்லிச் சிரித்தது.

குட்டி முயல் ஏன் சிரித்தது?

2. படித்துக்காட்டுக.



ஏரி
கரை
நிலா
மழை

குளம்
மணம்
ஓடம்
கிணறு

ஈரோடு
அழகு
ஆந்தை
போர்வை

கப்பல்
நாங்கள்
வெள்ளம்
வானவில்

பூக்கடை
ஓடியது
செய்தாய்
பேசலாம்

உண்டியல்
சேமித்தாள்
விளையாட்டு
மகிழ்ந்தேன்

3. படித்து விடையளிக்க.

1. படத்தில் இருப்பது எது? ✓ செய்க.

மான் ☐

கப்பல் ☐

காளான் ☐



2. சொற்களை உருவாக்கி எழுதுக.

ரி ந ஏ

_____ , _____

3. தேர்ந்தெடுத்து எழுதுக.

தம்பி பலா பூக்கள்

அ) இரண்டு எழுத்துச் சொல் : _____

ஆ) 'ம்' எழுத்து உள்ள சொல் : _____

4. சரியான விடை எது? ✓ செய்க.



பர்வீன் பந்து செய்தாள்.

தம்பிக்குக் கொடுத்தாள்.

பந்து செய்தது யார்?

தம்பி ☐ பர்வீன் ☐ மாலா ☐

4. சுள்ளெறும்பின் ஒரு நாள்...

அலகு 2

சுள்ளெறும்பு, நண்பர் கட்டெறும்பைக் காணச் சென்றது. வழியில் நீர் ஓடியது. நண்பரின் வீட்டுக்கு ஆபத்து. நண்பரின் வீட்டைக் காப்பாற்றியது. எப்படிக் காப்பாற்றி இருக்கும்?

ஆசிரியர் கையேடு

எல்லோரும் கூறும் விடைகள் பாடத்திற்குள் உள்ளதா? படித்துப் பார்க்கலாமா?

இதுதான் சுள்ளெறும்பு.

இதன் நண்பர் கட்டெறும்பு.

சுள்ளெறும்புக்கு இனிப்பு கிடைத்தது.

கட்டெறும்புக்குத் தர நினைத்தது.

இனிப்புடன் புறப்பட்டது.

குடத்தில் நீர் ஒழுகியதைப் பார்த்தது.

நீரின் பாதையைக் கவனித்தது.

கட்டெறும்பின் வீட்டுக்கு ஆபத்து!



சுள்ளெறும்பு ஓடியது...
நீரும் ஓடியது...
சுள்ளெறும்பு வேகமாக ஓடியது.
எச்சரிக்கை தந்தது.
கட்டெறும்புகள் வந்தன.

நீரைப் பார்த்தன.
அனைத்தும் ஓடின.
குச்சிகளை எடுத்தன.
மண்ணைக் கீறின.

நீரின் பாதையை மாற்றின.
கட்டெறும்பின் வீடு தப்பியது.
அனைத்தும் மகிழ்ந்தன.


சுள்ளெறும்பு வீடு திரும்பியது.
அம்மா எறும்பு பார்த்தது.
வாயில் என்ன? என்றது.
இனிப்பு நினைவுக்கு வந்தது.
கொடுக்க மறந்தேன் என்றது.
நாளை கொடுப்பேன் என்றது!

சுள்ளெறும்பின் மறுநாள்...





எறும்பு இன்று என்னென்ன செய்தது? பேசலாம்.





















செய்கை விளையாட்டு



- எறும்பு... எறும்பு... சுள்ளெறும்பு...
  என்று சொல்லுவேன்;
  சுற்றிச் சுற்றி நடப்பேன்.



செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டு / ஒலிப்பதிவைக் கேட்டுப் பின்தொடர்ந்து படிக்கலாம்.

GA4WN



2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.

1. _____	6. _____
2. _____	7. _____
3. _____	8. _____
4. _____	9. _____
5. _____	10. _____



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவில் ஒவ்வொருவருடனும் ஒப்பிட வேண்டும்.



அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் :

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை :

3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.



எனக்குப் பிடித்த தொடர் :

4. பேசலாம்.





ஆசிரியர் கைபேடு

ஒரு நாளில் செய்த செயல்களைப் பற்றிப் பேச வேண்டும்.



5. படித்து விடை எழுதுக.

படித்தல் பலகை

கட்டெறும்பு	இனிப்பு	நீர்	பார்த்தது
ஆபத்து	எச்சரிக்கை	வந்தன	வீடு
தப்பியது	மகிழ்ந்தன	அம்மா	சுள்ளெறும்பு

1. விடுபட்ட எழுத்துகளை நிரப்புக : கட் ____ ____ ____ பு

2. இரண்டு எழுத்துச் சொற்கள் : _____ , _____

3. உயிரெழுத்தில் தொடங்கும் சொற்கள் : _____ , _____ ,

   _____ , _____

4. **'ன'** எழுத்தில் முடியும் சொற்கள் : _____ , _____

சொற்களை விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.

6. பாடச்சுருக்கம் – படிக்க: விடையளிக்க.



சுள்ளெறும்பின் ஒரு நாள்...

சுள்ளெறும்புக்கு இனிப்பு கிடைத்தது.

கட்டெறும்புக்குத் தர நினைத்தது.

கட்டெறும்பு வீட்டுக்கு ஆபத்து.

சுள்ளெறும்பு எச்சரிக்கை தந்தது.

வீடு தப்பியது!

இனிப்பைக் கொடுக்க மறந்தது.

நாளை கொடுப்பேன் என்றது.



1. இனிப்பைக் கொடுக்க மறந்தது எது?

   சுள்ளெறும்பு ☐ கட்டெறும்பு ☐

2. _____ வீட்டுக்கு ஆபத்து.

3. சுள்ளெறும்புக்கு என்ன கிடைத்தது?

   _____



7. சொல்வதை எழுதுக.

ஆசிரியர் கையேடு

படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக் கேட்டு எழுத வேண்டும்.

8. சொற்களை உருவாக்கி எழுதுக.





கட்டம்,

9. படிக்க.







செடியில் பூத்த மலர்,

மஞ்சள் வண்ண மலர்,

ஆடும் அழகு மலர்,

எனக்குப் பிடித்த மலர்.



10. ஒருமை, பன்மை அறியலாம்.



1. படத்தில் உள்ளவற்றின் பெயர்களைக் கூறுக.

2. நிரப்புக.

அ) கடையில் பானைகள் இருந்தன.

அம்மா, ஒரு _____ வாங்குகிறார்.

ஆ) பூ மேல் ஒரு தேனீ உள்ளது.

தேன் கூட்டின் அருகே _____ பறக்கின்றன.

இ) குளத்தில் _____ நீந்துகின்றன.

ஒரு வாத்து பார்க்கிறது.

ஆசிரியர் கையேடு

ஒருமை, பன்மை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

11. தொடருக்கு உரிய படத்தை ✓ செய்க.



கரும்பில் கட்டெறும்பு







12. ஒரு சொல்லை மாற்றி எழுதுக.



தோசை சாப்பிட்டேன்.
சுவையாக இருந்தது.
எனக்குப் பிடித்தது.

வடை சாப்பிட்டேன்.
சுவையாக இருந்தது.
எனக்குப் பிடித்தது.

13. சொற்பட்டியல் உருவாக்குக.



எ — க — ப — அ — த — ம

எ – எண், எள், எடு, எலி, எருது, எழுத்து...

- ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்கள் எழுதிப் பட்டியல் உருவாக்குக.
- வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

14. நீங்கள் என்ன செய்வீர்கள்? ✓ செய்க: காரணம் கூறுக.





இப்படி ஒரு சூழலில்,

- சண்டை போடுவேன். ☐
- இருவரும் விளையாடுவோம். ☐
- இருவருக்கும் வேண்டாம். ☐



இப்படி யாரேனும் செய்தால்,

- கண்டுகொள்ள மாட்டேன். ☐
- வரிசையில் வரச் சொல்லுவேன். ☐
- நானும் முன்னால் செல்வேன். ☐



இப்படி நடந்தால்,

- உதவுவேன். ☐
- சிரிப்பேன். ☐
- ஆசிரியரிடம் கூறுவேன். ☐

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.

15. சொல்லிப் பழகுக.





வெள்ளத்தில் தப்பிய எறும்பும்
வெல்லம் தின்ன விரும்பும்

உருண்டு ஓடுது உருளை
தத்தித் தாவுது தவளை

ஆசிரியர் கையேடு

மீண்டும் மீண்டும் சரியாக ஒலித்துப் பழக வேண்டும்.

கற்றல் பயணம்

படைப்பு நேரம்.



- **சுள்ளெறும்பின் ஒரு நாள்...** கதையைச் சொந்த மொழிநடையில் சொல்லலாம்.
- எறும்புகள், வீட்டைக் காப்பாற்ற வேறு என்னென்ன செய்திருக்கலாம்? முடிவை மாற்றிக் கூறலாம்.



நான் கற்றவை





1. கதையின் முடிவை மாற்றிக் கூற முடியும். ☐ ☆☆☆
2. ஒருமை, பன்மைச் சொற்களைக் கண்டறிய முடியும். ☐ ☆☆☆
3. எழுத்துகளைக் கொண்டு சொல் உருவாக்க முடியும். ☐ ☆☆☆

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

5. நானும் உதவுவேன்

அணிலுக்குப் பசித்தது. ஒரு கொட்டை கிடைத்தது. தின்ன நினைத்தது. கொட்டை ஆழமான குழிக்குள் விழுந்தது. அணில் அழுதது. யானை தும்பிக்கையால் எடுக்க முயன்றது; முடியவில்லை. ஆனாலும் அணிலுக்குக் கொட்டை கிடைத்தது. யானை என்ன செய்திருக்கும்?



ஆசிரியர் கையேடு

எல்லோரும் கூறும் விடைகள் பாடத்திற்குள் உள்ளதா? படித்துப் பார்க்கலாமா?




வேறு கொட்டையைத் தேடு.
அது என் நண்பர் கொடுத்தது. எனக்குப் பசிக்கிறதே. ஊம்ம்....
அழாதே, என்னுடன் வா. நான் உதவி செய்கிறேன்.
தண்ணீர் எதற்கு?
சர்ர்ர்...
குழிக்குள் தண்ணீர் விட்டால் என்ன ஆகும் அண்ணா?
ஐ! கொட்டை மேலே வந்து விட்டது.
எடுத்துச் சாப்பிடு.



செய்கை விளையாட்டு

- யானை வருது... யானை வருது... என்று சொல்லுவேன். யானை தும்பிக்கையை ஆட்டி நடப்பது போல் நடப்பேன்.





செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டு / ஒலிப்பதிவைக் கேட்டுப் பின்தொடர்ந்து படிக்கலாம்.

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



1. _____	6. _____
2. _____	7. _____
3. _____	8. _____
4. _____	9. _____
5. _____	10. _____



தாம் எழுதிய அதே சொற்களை அதிக எண்ணிக்கையில் எழுதியது யார் என்பதைக் குழுவில் ஒவ்வொருவருடனும் ஒப்பிட வேண்டும்.



அதிகமான சொற்களை ஒன்றுபோல் எழுதிய நண்பர் : _____

ஒன்றுபோல் எழுதிய சொற்களின் எண்ணிக்கை : _____

3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.



எனக்குப் பிடித்த தொடர் :

4. பேசலாம்.





ஆசிரியர் கையேடு

அவரவர் செய்த உதவி குறித்துப் பேசச் செய்ய வேண்டும்.

5. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

தண்ணீர்	அணில்	மகிழ்ச்சி	தேடு
நண்பர்	அழாதே	யானை	ஆமை
சாப்பிடு	நல்லது	உதவி	செய்வேன்

1. மூன்று எழுத்துச் சொற்கள் : _____, _____, _____

2. இரண்டு மெய் எழுத்துகள் உள்ள சொற்கள் : _____,

   _____, _____, _____

3. 'டு' எழுத்தில் முடியும் சொற்கள் : _____, _____

4. எனக்குப் பிடித்த சொற்கள் : _____, _____

சொற்களை விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.



6. பாடச்சுருக்கம் – படிக்க: விடையளிக்க.

நானும் உதவுவேன்

அணிலுக்குப் பசித்தது.
கொட்டை கிடைத்தது.
குழியில் விழுந்தது.



யானை எடுத்தது.
அணில் மகிழ்ந்தது.





ஆமை சிக்கியது.
அணில் உதவியது.
ஆமை மகிழ்ந்தது.



சரி ✓ தவறு × குறியிடுக.

1. யானை நன்றி சொன்னது. ☐
2. அணிலுக்குப் பசித்தது. ☐
3. கொட்டை குழியில் விழுந்தது. ☐
4. ஆமை அணிலுக்கு உதவியது. ☐

7. சொல்வதை எழுதுக.





ஆசிரியர் கையேடு

படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக் கேட்டு எழுத வேண்டும்.

8. தொடர்புடைய சொல்லை எடுத்து எழுதுக.





குடை



குருவி



குதிரை



குகை



குழாய்



குச்சி

மரம்	குச்சி	மழை		கூடு	
வண்டி		சிங்கம்		தண்ணீர்	



9. படிக்க.







காற்று வீசியது.

இலை விழுந்தது.

தண்ணீரில் மிதந்தது.

எறும்பு பார்த்தது.

இலையில் ஏறியது.

ஐ, இலைப்படகு!







10. பேசலாம்: எழுதலாம்.



ஆசிரியர் கையேடு

படத்தைப் பார்த்துப் பேச வேண்டும்; தெரிந்தவற்றின் பெயர்களை எழுத வேண்டும்.

11. படத்திற்கு உரிய தொடர் எது?



- வாளியில் சிவப்புச் சட்டை. ☐
- கொடியில் சிவப்புச் சட்டை. ☐
- கொடியில் பச்சைச் சட்டை. ☐

12. ஒரு சொல்லை மாற்றி எழுதுக.

மழை மழை பெய்தது.

மரங்கள் எல்லாம் நனைந்தன.

மழை மழை பெய்தது.

வீடுகள் எல்லாம் நனைந்தன.

13. நீங்கள் என்ன செய்வீர்கள்? ✓ செய்க; காரணம் கூறுக.



உதவுவேன். ☐

உதவ மாட்டேன். ☐



உதவுவேன். ☐

உதவ மாட்டேன். ☐

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.

14. சொல்லிப் பழகுக.





விருந்து தின்ற பருந்து
பறந்து போனது விரைந்து

அத்தை அடுக்கிய செங்கல்
செங்கல் அடுப்பில் பொங்கல்

ஆசிரியர் கையேடு

மீண்டும் மீண்டும் சரியாக ஒலித்துப் பழக வேண்டும்.

கற்றல் பயணம்



படைப்பு நேரம்.

நானும் உதவுவேன் – பாடத்தில் பிடித்த காட்சியை உருவாக்கலாம்; குழுவில் பகிரலாம்.







நான் கற்றவை





1. சொற்களை எழுத முடியும். ☐ ☆ ☆ ☆
2. சிறு தொடர்களைப் படிக்க முடியும். ☐ ☆ ☆ ☆
3. கேட்ட பகுதியைப் புரிந்து விடைகூற முடியும். ☐ ☆ ☆ ☆

ஆசிரியர் கையேடு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

திரும்பிப் பார்க்கலாம்





படத்தைப் பாருங்கள். எங்களுக்குக் கதை கூறுங்கள்.









எங்களுக்குப் பசிக்கிறது. உணவைக் கண்டுபிடியுங்கள்.



வாழைப்பழம்

















நாங்கள் பார்க்கிறோம். உரிய பெயரை எழுதுங்கள்.



ஊஞ்சல்



ஊஞ்சல்கள்



பழம்



_____



_____



பூக்கள்



மீன்



_____



சொன்னது யார்? கோடிட்டு இணையுங்கள்.

பழம் பறிக்கிறேன்.

குளத்தில் இருக்கிறேன்.

வரிசையில் செல்கிறோம்.







நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்



கி
ஙி
சி
ஞி
டி
ணி
தி
நி
பி
மி
யி
ரி
லி
வி
ழி
ளி
றி
னி

ஙி பி கி தி யி ணி
சி லி ழி ளி வி னி
மி டி ரி றி நி ஞி



காய்கறி

கா
கா ய் → காய்
காய் க → காய்க
காய்க றி → காய்கறி



மின்னல்

மி
மி ன் → மின்
மின் ன → மின்ன
மின்ன ல் → மின்னல்



இடி	வாளி	அல்லி	மின்னல்
நரி	கரடி	விசிறி	இஞ்சி
பறி	தம்பி	பாட்டி	தயிர்



சிப்பி
சிறிய சிப்பி
கடலில் சிறிய சிப்பி

மிட்டாய் தந்தான்.
சாமந்தி பறித்தாள்.
தாத்தாவின் தடி.
காய்கறி வாங்கினார்.











நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்





கீ
ஙீ
சீ
ஞீ
டீ
ணீ
தீ
நீ
பீ
மீ
யீ
ரீ
லீ
வீ
ழீ
ளீ
றீ
னீ

பீ லீ யீ தீ ஙீ ளீ

டீ ரீ சீ வீ னீ கீ

மீ நீ ஞீ ழீ றீ ணீ



கண்ணீர்

க

க ண் ⟶ கண்

கண் ணீ ⟶ கண்ணீ

கண்ணீ ர் ⟶ கண்ணீர்

நீச்சல்

நீ

நீ ச் ⟶ நீச்

நீச் ச ⟶ நீச்ச

நீச்ச ல் ⟶ நீச்சல்



வீதி	மீதி	கீரி	மீன்
வீரம்	தீ	நீலம்	பன்னீர்
சீரகம்	இளநீர்	கண்ணீர்	விண்மீன்



கீரி

சீறிய கீரி

காட்டில் சீறிய கீரி



நீந்திய மீன்.

தட்டில் சீரகம்.

மின்னிய விண்மீன்.

மரத்தில் சீத்தாப்பழம்.











நானே செய்வேன்



1. கேட்டு, விடை கூறுக.

பாலா 'ஓ' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான். அவன் முகத்தில் ஒரே மகிழ்ச்சி. கையில் ஒரு நீளமான நூல் இருந்தது. நூலின் மறுமுனையில் தட்டான்பூச்சி ஒன்றைக் கட்டி வைத்திருந்தான். அதைப் பார்த்த அம்மா அதிர்ந்தார். தட்டான்பூச்சியை ஏன் நூலில் கட்டியுள்ளாய் என்று கேட்டார். நான் அதனுடன் விளையாடுவேன் என்றான் பாலா. யாராவது உன்னைக் கயிற்றால் கட்டி, கயிற்றின் மறுமுனையை இழுத்துச் சென்றால், அப்போது உனக்கு எப்படி இருக்கும்? என்று அம்மா கேட்டார். பாலா எதுவும் பேசவில்லை. தட்டான்பூச்சியை அவிழ்த்துவிட்டான். அது பறந்து செல்வதைப் பார்த்து மகிழ்ந்தான்.

பாலா தட்டான்பூச்சியை ஏன் பறக்கவிட்டான்?

2. படித்துக்காட்டுக.



தேன்
நாளை
பானை
பாதை

குடம்
குச்சி
மலர்
வாத்து

நன்றி
காகம்
சட்டை
கொட்டை

விருந்து
மறுநாள்
நண்பன்
மஞ்சள்

வண்ணம்
தண்ணீர்
தும்பிக்கை
எச்சரிக்கை
சுள்ளெறும்பு

கீறின
எடுத்தன
உதவுவேன்
கவனித்தது
சொல்வேன்

3. படித்து விடையளிக்க.

1. எழுத்துகளைக் கொண்டு உருவாகும் சொல் எது?

க் டி
கொ கு

செடி ☐ கொக்கு ☐ பாக்கு ☐

2. ஒரே எழுத்தில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

கரடி / எருமை / வண்டி

_____ , _____

3. தொடருக்கு உரிய படத்தைத் தேர்ந்தெடுக்க.

தண்ணீர் கொடுக்கிறேன்.



☐



☐



☐

4. விடை எழுதுக.

கட்டெறும்புகள் வந்தன.
குச்சிகளை எடுத்தன.
மண்ணைக் கீறின.
நீரின் பாதையை மாற்றின.

அ) நீரின் பாதையை மாற்றப் பயன்பட்டவை எவை?

கற்கள் ☐ இலைகள் ☐ குச்சிகள் ☐

ஆ) குச்சிகளை எடுத்தவை எவை? _____

உரிய இடத்தில் கோடிட்டு இணைக்கலாம்.





செய்து மகிழலாம்.



என்னால் முடியும்

மண்
விதை
மாலை
கூடு
பரிசு

அருவி
ஆழம்
உணவு
பச்சை
வாத்து

காற்று
வானம்
குதிரை
காளான்
நத்தை

பந்து
சீப்பு
பூண்டு
பெட்டி
மயில்

ஊஞ்சல்
மீன்கள்
நடனம்
வியப்பு
செடிகள்

செய்வேன்
தருவேன்
அழுதது
பசித்தது
ஆடுகிறாள்

கரும்பு
கூடாரம்
தேங்காய்
கால்வாய்
கடற்கரை





உதவுவேன்
பழகுவேன்
நினைத்தது
படிக்கிறான்
பறிக்கிறேன்

ஆசிரியர் கைபேடு

நிறுத்தாமல் எத்தனை சொற்களைப் படிக்க முடிகிறது? நண்பர்களுடன் போட்டியிட்டுப் படிக்கலாம்.

தமிழ் எழுத்துகள்

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ங	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

ஆய்த எழுத்து ∴

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

முதல் பருவக் கற்றல் பயணத்தில்...



STANDARD TWO

TERM - I

ENGLISH



Preface

